# பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

SEDR
Supporting Effective Dispute Resolution
ඵලදායීව ආරවුල් නිරාකරණයට සහායවීම
பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

## திட்டக் கண்ணோட்டம்

பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) என்பது ஏஷியா பவுண்டேஷனின் (TAF) பங்காளித்துவத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் STRIDE திட்டத்தின் பங்களிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) நிதியுதவியுடனும் பிரிட்டிஷ் கவுன்ஸிலினால் அமுல் செய்யப்படும் ஒரு நான்கு ஆண்டுகால நீதிக்கான அணுகல் வேலைத்திட்டமாகும். 7 மில்லியன் யூரோ பெறுமதியான இந்த வேலைத்திட்டமானது அதனது தொடக்க கட்ட செயற்பாடுகளை பெப்பிரவரி 1, 2020 இல் ஆரம்மாகியுள்ளது.

இந்த திட்டமானது இலங்கையில் பிணக்கு தீர்வுக்கான வழிமுறைகளின் செயற்திறனையும், கிடைக்கும் தன்மையையும் மேம்மடுத்துவதற்கும் சமூக ஒத்திசைவை ஊக்குவிப்பதற்கும் மேலும் அனைத்தையும் உள்ளடக்கிய சமூக-அரசு ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும் நான்கு விரிவான பயன்விளைவுப் பரப்புக்களை உள்ளடக்கியது.

### ஒட்டுமொத்த நோக்கம்:

மக்களுக்கும் அரசுக்கும் இடையே உரையாடல்களைப் பலப்படுத்தி, அதன் மூலம் முரண்பாட்டிற்கு மூலகாரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் உள்ளூர் பிணக்குகள் மேலும் மோசமடைவதைத் தடுத்தல்.

### குறிப்பான நோக்கம்:

தனிநபர் ரீதியான மற்றும் சமூக ரீதியான பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் சேவைகளை மேம்படுத்துதல்.

Part of the programme
STRIDE STRENGTHENING TRANSFORMATION, RECONCILIATION AND INCLUSIVE DEMOCRATIC ENGAGEMENT
Funded by the European Union
Implemented by
BRITISH COUNCIL
The Asia Foundation

SEDR

Supporting Effective Dispute Resolution

ඵලදායීව ආරවුල් නිරාකරණයට සහායවීම

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

# திட்ட தொலைநோக்கு மற்றும் பயன்விளைவுப் பரப்புக்கள்

திட்ட தொலைநோக்கு ஆனது:

- இலங்கையில் பிணக்கு தீர்வுக்கான வழிமுறைகளின் செயற்திறனையும் கிடைக்கும் தன்மையையும் மேம்மடுத்தல்
- சமூக ஒத்திசைவை ஊக்குவித்தல் மற்றும் சமூக பிணக்கு தீர்வுகாணுதலில் அனைத்தையும் உள்ளடக்கிய சமூக-அரச ஈடுபாட்டை அதிகரித்தல்.

## பயன்விளைவுப் பரப்பு 1

தனிநபர் பிணக்குகளை (குடும்ப, குற்றவியல், சொத்து, நிதி தொடர்பான பிணக்குகள்) தீர்த்துவைப்பதில் சமூக மத்தியஸ்தச் சபைகளின் செயற்பாடுகளை மேம்படுத்துதல்

## பயன்விளைவுப் பரப்பு 2

காணி சம்பந்தமான விசேட மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

## பயன்விளைவுப் பரப்பு 3

பொதுவான பிரச்சினைகளுக்ககு தீர்வு காண்பதற்கும் மற்றும் சமூக மட்டத்தில் குறைகளை தீர்த்து வைப்பதில் மேம்பாடடையவும் எல்லோரையும் உள்வாங்கிய வகையில் உள்ளூர் செயற்களங்கள் செயற்படுதல்.

## பயன்விளைவுப் பரப்பு 4

ஏன், எவ்வாறு மத்தியஸ்தமானது பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பான அதிகரித்துள்ள விழிப்புணர்வு, மேம்பட்ட தரவு சேகரிப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக்கள் என்பனவற்றின் ஊடாக மத்தியஸ்த செயன்முறையின் பயன்களை சிரேஸ்ட அதிகாரிகளும், பங்குதாரர்களும் சான்றுபடுத்தும் நிலையில் காணப்படுவர்.

## தந்திரோயாப செயற்பாட்டுப் பரப்புகள்

SEDR ஆனது திட்ட நடவடிக்கைகள் தேசிய மற்றும் உள்ளூர் ஆகிய இரு மட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சவாலான நிலைமைகளை எதிர்கொள்ளும் முக்கிய புவியியல் பகுதிகளான கீழ்வரும் பகுதிகளில் பிணக்கு தீர்வுக்கான வழிமுறைகளை மேம்படுத்துவதில் குறிப்பாக கவனம் செவுத்துகிறது:

- கிழக்கு மாகாணம்
- வடக்கு மாகாணம்
- ஊவா மாகமணம்

## திட்டத்தின் தற்போதய நிலை

SEDR ஆனது அதன் தொடக்க கட்டத்தை நிறைவுசெய்ததுடன் பெப்பிரவரி 2021 இல் அதன் நடைமுறைப்படுத்தல் கட்டத்தை தொடங்கியுள்ளது. மேலும் பிரிட்டிஷ் கவுன்ஸிலானது தற்போது COVID-19 பெருந்தொற்றின் தாக்கங்களுக்கு SEDR பதிலளிப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

SEDR
Supporting Effective Dispute Resolution
ඵලදායීව ආරවුල් නිරාකරණයට සහායවීම
பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

# முக்கிய திட்டப் பேசும்பொருள்கள்

## உள்வாங்கிய அணுகுமுறை

SEDR இன் பிணக்குகளை தீர்க்கும் பொறிமுறைக்கு ஆதரவளிக்கும் அணுகுமுறையானது உள்வாங்கியதனடமை, சூழ்நிலைக்கு பொருத்தமான மற்றும் நிலைபேறான விளைவுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும். இவற்றை அடைவதற்கு SEDR ஆனது பின்வருவனவற்றை கவனத்தில் எடுப்பதை உறுதிப்படுத்தும்:

- இளைஞர் ஈடுபாடு
- பாலின உள்வாங்கலை ஊக்கமளித்தல்
- பல்வகையான சமூகங்களை உள்வாங்கல்



## பயனுள்ள ஒத்துழைப்பு



SEDR ஆனது ஏஷியா பவுண்டேஷனின் பங்காளித்துவத்துடன் செயல்படும். இதனூடாக பிணக்கு தீர்வுக்கான மாற்றுவழி முறையாக மத்தியஸ்தத்தை ஊக்குவிப்பதில் நீதி அமைச்சிக்கு பல ஆண்டுகளாக அவர்கள் வழங்கிய தொழில்நுட்ப உதவிகள் வலுப்பெறும்.

ஏஷியா பவுண்டேஷன் ஆனது SEDR இன் பயன்விளைவுப் பரப்புக்கள் 1 மற்றும் 2 ஆகியற்றை முன்நின்று நடமுறைப்படுத்தும். இந்தத் திட்டமானது குறிப்பாக கீழ்வருவோருடன் பணியாற்றும்:

- மத்தியஸ்த சபை ஆணைக்குழு (MBC)
- மத்தியஸ்த அலுவலர்கள் (MOs) - மத்தியஸ்த பயிற்சி அலுவலர்கள் (MTOs) அபிவிருத்தி அலுவலர்கள் - மத்தியஸ்தம் (DOs)
- சமூக மத்தியஸ்தர்கள்
- விசேட காணி மத்தியஸ்தர்கள்

# SEDR

Supporting Effective Dispute Resolution

ඵලදායීව ආරවුල් නිරාකරණයට සහායවීම

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

@SEDRSriLanka

#MakeGreatSTRIDES

#SEDRtogether

Part of the programme

STRIDE STRENGTHENING TRANSFORMATION, RECONCILIATION AND INCLUSIVE DEMOCRATIC ENGAGEMENT

Funded by the European Union

Implemented by

BRITISH COUNCIL

The Asia Foundation

இந்த வெளியீடானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கங்கள் SEDR இனது முழுப்பொறுப்பாகும் மேலும் இவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டியதில்லை.